<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 4/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 10 P.W.4 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடாசலம் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கருப்பன் | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | : |
| Mail ID | : | | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 19.01.2026.

**<u>எதிரி ஆஜரின்மைக்காக மனு அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் அமராவதி நகர் காண்டிராக்ட் காலனியில் வசித்து வருகிறேன். எலக்டீரிசியனாக ஆக்ஸ்போர்டு பள்ளியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 07.12.2019 ம் தேதி நான் டீ சாப்பிட 9/6 செக்போஸ்ட் அருகில் சென்ற போது ஒரு பெண் போலிஸ் மற்றும் ஒரு ஆண்போலிஸ் ஆகியோர் நின்று படம் வரைந்து கொண்டிருந்தார்கள். நாங்கள் உள்ளுர் என்பதால் எங்களிடம் இந்த இடங்கள் பற்றி விவரம் தெரியுமா என்று கேட்டார்கள். நாங்கள் தெரியும் என்று சொன்னோம். 06.12.2019 ம் தேதி நடந்து சென்ற நடராஜன் என்பவர் மீது வேகமாக வந்து பைக் மோதி விபத்து ஏற்படுத்தி இறந்து போன வழக்கு சம்பந்தமாக இடத்தை வரைபடமாக வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக எங்களை இருக்க சொன்னார்கள். நானும் மணிகண்டன் என்பவரும் சாட்சியாக இருந்து அந்த இடத்தின் விவரங்களை கூறினோம் போலீசார் வரைபடம் வரைந்து காட்சி கையொப்பம் கேட்டார்கள் நாங்கள் விவரங்களை தெரிந்து கொண்டு சாட்சி கையப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1

வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது.இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. போலிசார் உங்களை எத்தனை மணிக்கு விசாரிததார்கள் என்றால் 6.00 மணிக்கு. காலையிலா அல்லது சாயங்காலமா என்றால் காலை நேரம். கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள விவரம் தெரியும் என்று சொல்லியுள்ள நிலையில் என்ன மரம் படத்தில் காட்டப்ப்டுள்ளது என்றால் வேப்ப மரம்.எத்தனை அடி துாரத்தில் உள்ளது என்றால் சுமார் 10 அடி துாரத்தில் உள்ளது. சம்பவ இடத்தின் அருகில் உள்ள தோட்டம்யாருடையது என்றால் ஆக்ஸ்போர்டு சென்டரின் உடையது. வழக்கில் இறந்தவர் உங்களுக்கு தெரிந்தவரா என்றால் அவர் பையன் எங்களது பள்ளியில் படித்து வருகிறார் அதன் மூலம் பழக்கம் . கையெழுத்து செய்த ஆவணம் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் ஆமாம். அதே பள்ளியில்வேலை செய்வதாலும் சம்பவத்தினஇடம் பற்றி தெரியும் என்பதாலும் வழக்கின் இறந்தவர் ஒரே ஊர்க்காரர் என்பதாலும் வழக்கில் நஷ்டஈடு பெற வேண்டி பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றால் ஆமாம்.

<u>மறுவிசாரணை இல்லை</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 4/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 11 P.W.5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 19.01.2026.

**முதல் விசாரணை**

நான் அமராவதி நகர் காண்டிராக்ட் காலனியில் வசித்து வருகிறேன். டிரைவராக ஆக்ஸ்போர்டு பள்ளியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 07.12.2019 ம் தேதி நானும் வெங்கடாசலம் என்பவரும் டீ சாப்பிட 9/6 செக்போஸ்ட் அருகில் சென்ற போது ஒரு பெண் போலிஸ் மற்றும் ஒரு ஆண்போலிஸ் ஆகியோர் நின்று படம் வரைந்து கொண்டிருந்தார்கள். நாங்கள் உள்ளூர் என்பதால் எங்களிடம் இந்த இடங்கள் பற்றி விவரம் தெரியுமா என்று கேட்டார்கள். நாங்கள் தெரியும் என்று சொன்னோம். 06.12.2019 ம் தேதி நடந்து சென்ற நடராஜன் என்பவர் மீது வேகமாக வந்து பைக் மோதி விபத்து ஏற்படுத்தி இறந்து போன வழக்கு சம்பந்தமாக இடத்தை வரைபடமாக வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக எங்களை இருக்க சொன்னார்கள். நானும் வெங்கடாசலம் என்பவரும் சாட்சியாக இருந்து அந்த இடத்தின் விவரங்களை கூறினோம் போலீசார் வரைபடம் வரைந்து காட்சி கையொப்பம் கேட்டார்கள் நாங்கள் விவரங்களை தெரிந்து கொண்டு சாட்சி கையப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான்.இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. ஆக்ஸ் போர்டு பள்ளியின் அருகில் நீங்களும் உங்கள் அண்ணனும் வெல்டிங்க கடை வைத்துநடத்தி வருகிறிர்கள் என்றால் ஆமாம். கடை உள்ள இடம் ஆக்ஸ்போர்டு பள்ளிக்கு உரிமையான இடம் என்றால் சரிதான். எந்த டீ கடையில் டீ சாப்பிட்டு கொண்டிருந்திர்கள் என்றால் கீர்த்தி பேக்கரியில் . கீர்த்தி பேக்கரியில் வைத்து போலிசார் கையெழுத்து பெற்றார்கள் என்றால் ஆமாம். உங்கள் இடத்தின் உரிமையாளர் பள்ளியில் இறந்தவரின் பேரன் படித்து வருவதாலும் பள்ளியின் உரிமையாளர் கேட்டு கொண்டதால் சாட்சியாக கையொப்பம் செய்து அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.